இணை ஆணையர்(மாவ) அலுவலகம், ஒசூர் கோட்டம், ஒசூர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.சா.முகமது அர்சத், பி.இ.,

செ.மு.ந.க. 878/ 2023 /அ2 நாள்:21 .08.2024

பொருள்: பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - ஒசூர் கோட்டம் -இணை ஆணையர் (மாவ) ஒசூர் அலுவலகம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2022-2023-ம் ஆண்டுக்கான தொகுதி- IVல் அடங்கிய இளநிலை உதவியாளர்கள் பட்டியல் வரப்பெற்றது - பணியேற்பு ஆணை வழங்கியது பணியில் சேர்ந்து கொண்டது - பணிவரன் முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையகம், சென்னை அவர்களின் கடிதம் எண்: 2030/PSD-D2/2022 , நாள்: 28.08.2023.
2. இவ்வலுவலக செ.மு.ந.க.எண். 878/2023/அ2, நாள்:11.09.2023

******

ஆணை:

1) பார்வை 1ல் காணும் கடிதத்தின் படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2022-2023 ஆண்டுக்கான தொகுதி- IVல் அடங்கிய தேர்வின் மூலம் தெரிவு செய்து பார்வை 2-ல் காணும் இணை ஆணையர் (மா.வ), ஒசூர் கோட்டம், ஒசூர் அவர்களின் செயல்முறை ஆணைகளின் படி இவ்வலுவலகத்திற்கு பணி நியமனம் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்து கொண்ட இளநிலை உதவியாளருக்கு கீழ்க்கண்டுள்ளவாறு பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியாளரின் பெயர் மற்றும் பதவி (திருமதி) | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்து கொண்ட நாள் | பணிவரன் முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | பா. தீபா இளநிலை உதவியாளர். | இணைஆணையர்(மா.வ), ஒசூர் | 21.09.2023 முற்பகல் | 21.09.2023 முற்பகல் |

2) இப்பணியாளர் தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினை பூர்த்தி செய்திடல் வேண்டுமென ஆணையிடப்படுகிறது.

3) இப்பணியாளர்கள் துறை தேர்வான மாவட்ட அலுவலக நடைமுறை நூலில் தேர்ச்சி பெறுவதுடன், அரசு அலுவலர் பயிற்சி மையம், பவானிசாகர் மூலம் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியினையும் நிறைவு செய்தல் வேண்டும்.

ஒம்/சா.முகமது அர்சத்,
இணை ஆணையர் (மா.வ),
ஒசூர் கோட்டம், ஒசூர்.

//உண்மை நகல் உத்தரவுபடி//

நேர்முக உதவியாளர்

பெறுநர்:

உரிய அலுவலர்களுக்கு.

நகல்:

1. பட்டியலுக்கு
2. உரிய இருக்கைக்கு